பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 11 2026 MONDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நேபாளத்துடனான நல்லுறவு வலுவாக உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேலும் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. வறுமையை அகற்றுவதில் வேளாண் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சோதனை ஓட்டத்தை, அடுத்த ஆண்டு மே மாதத்தில் மேற்கொள்ள ரயில்வே திட்டமிட்டுள்ளது.

5. உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Abhinandh Pradhivathi - Divyanshi Bhowmick இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேபாளத்துடனான நல்லுறவு வலுவாக உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் தம்மை சந்தித்த நேபாள பிரதமர் திரு Balendra Shah-வுடன் ஆலோசனை நடத்திய பின்னர், வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், நேபாள பிரதமர் பேச்சு நடத்தினார்.

நேபாளத்திற்கு 24 ஆயிரம் கோடி நேபாள ரூபாய் மதிப்பிலான திட்டங்களை திரு. நரேந்திர மோடி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, உத்தரபிரதேசத்தின் அயோத்தியிலிருந்து நேபாளத்தின் Janakpur Dham இடையேயான ரயில் சேவையை, இரு தலைவர்களும் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தனர்.

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேலும் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Ujjain-ல் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குழாய் மூலம் இயற்கை எரிவாயு வழங்கும் திட்டம் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது 25 ஆயிரத்து 300 கிலோமீட்டர் தொலைவிற்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு வழங்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று கல்வித்துறை நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், கல்வித்துறை சார்பில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஊரகப் பகுதி மேம்பாட்டில் வேளாண் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், வறுமையை அகற்றுவதில் வேளாண் துறையின் பங்கு குறித்த பயிலரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

50 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதில், வேளாண் துறை முக்கியப் பங்கு வகித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காக, வேளாண்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

வன உயிரினங்களை பாதுகாப்பதில், வனத்துறை அலுவலர்களும், சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய வனவிலங்குகள் வாரியத்தின் நிலைக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

வனஉயிரின வாரத்தை ஒட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் வனவிலக்கு பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கான விருதுகளையும் திரு. புபேந்தர் யாதவ் வழங்கினார்.

வக்ஃப் சட்ட திருத்தங்கள், வக்ஃப் வாரியத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் வக்ஃப் புகைப்பட அருங்காட்சியகத்தையும், மகளிர் தொழுகை கூடத்தையும் திறந்து வைத்து அவர் பேசினார்.

நாட்டில் சிறப்பாக செயல்படும் வக்ஃப் வாரியங்களில், ஜம்மு கஷ்மீர் வக்ஃப் வாரியம் முன்னணியில் உள்ளதாக அவர் கூறினார்.

இந்த வாரியத்திற்கு தேவையான நிதி மற்றும் நிர்வாக உதவிகளை மத்திய அரசு வழங்கும் என்றும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

Faridabad-ல் உலக நிலச்சரிவு அமைப்பின் கூட்டத்தில் தொடக்கவுரையாற்றுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

இயற்கை பேரிடர்களால் உயிரிழப்புகள் ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய நிலச்சரிவு பாதிப்பு தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

15 மாநிலங்களுக்கு இந்த திட்டத்திற்கான நிதியுதவி வழங்கப்படும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது புல்லட் ரயில் சோதனை ஓட்டத்தை, அடுத்த ஆண்டு மே மாதத்தில் மேற்கொள்ள ரயில்வே திட்டமிட்டுள்ளது.

Surat - Bilimora இடையே 50 கிலோமீட்டர் தொலைவிலான வழித்தடத்தில் இந்த சோதனை ஓட்டம் நடத்தப்படவுள்ளது.

மணிக்கு 280 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய வகையில் இந்த சோதனை ஓட்டம் நடைபெறவுள்ளது.

மும்பை - அஹமதாபாத் இடையேயான புல்லட் ரயில் வழித்தடத்தில் சூரத் - Vapi இடையே அடுத்த ஆண்டு இறுதிக்குள் ரயில் சேவை செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக, மத்திய அரசு, தேர்தல் ஆணையம் மற்றும் சட்ட ஆணையம் பதில் மனு தாக்கல் செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறைக்கும், சட்டம் மற்றும் நீதித் துறைக்கும் இந்த மனு தொடர்பாக நோட்டீஸ் அனுப்புமாறும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தனிக்கவனம் செலுத்தி வருவதாக மத்திய சுகாதாரத்துறை செயலர் திருமதி. Punya Salila Srivastava தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் மனித வளர்சிதை மாற்ற ஆராய்ச்சிக்கான பிரிவினை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த பிரிவு தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் ஆரோக்கிய நலவாழ்வு மையங்களில் 7 கோடிக்கும் மேற்பட்ட யோகா பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளதாக திருமதி. Punya Salila Srivastava தெரிவித்தார்.

உலக ஹிந்து மாநாடு மும்பையில் அடுத்த மாதம் 18ஆம் தேதி தொடங்கி, 20ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த விஷ்வ ஹிந்து பரிஷத் பொதுச்செயலாளர் சுவாமி விக்யானந்த், 60 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளதாக கூறினார்.

உத்தரபிரதேசத்தில் அரசியல் சாசன தினத்தை ஒட்டி, அரசு பள்ளிகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

அரசியல் சாசனத்தின் மாண்புகளை எடுத்துரைக்கும் வகையில் வரும் வியாழக்கிழமை இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேற்குவங்கத்தை பெயர் மாற்றம் செய்வதற்கான தீர்மானம், சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி அறிவித்துள்ளார்.

இன்று கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கூறினார்.

அடுத்த மாதம் 9ஆம் தேதி இந்த தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்கத்தை PASCHIM BANGA என பெயர் மாற்றம் செய்வதற்கு இந்த தீர்மானம் வகை செய்யும் என்று திரு. சுவேந்து அதிகாரி கூறினார்.

ராஜஸ்தானில் பள்ளி மாணவிகளுக்கு தற்காப்புக் கலை பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் அம்மாநில காவல்துறையும், மாநில பள்ளிக் கல்வித் துறையும் கையெழுத்திட்டுள்ளன.

இதன்படி, 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக ராஜஸ்தான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கேரளத்தில் மின்சார தட்டுப்பாட்டை களைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு ஆராய்ந்து வருவதாக மின்துறை அமைச்சர் திரு. Sunny Joseph கூறியுள்ளார்.

இன்று இடுக்கியில் ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசினார்.

இடுக்கி அணையில் நீர் இருப்பு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதம் குறைவாக உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Abhinandh Pradhivathi - Divyanshi Bhowmick இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கலப்பு இரடையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 4-11, 11-2, 11-8, 11-4 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Lin Chin Ting – Wu Jia En இணையை வென்றது.

உலக Cadet செஸ் சாம்பியன் போட்டியின் முதல்சுற்று முடிவில் இந்தியா, மூன்றரை புள்ளிகளை பெற்றுள்ளது.

Georgia-வின் Batumi-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்றில், மகளிர் 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Divi Bijesh-ம், 10 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Nakshatra Gumudavelly வெற்றி பெற்றனர்.
